## சி.பி.எஸ்.இ. பாடத்திட்டம்: “இந்தித் திணிப்பு இல்லை” என்று கூறுவது அப்பட்டமான பொய்!

# தமிழ்நாடு எந்தவொரு மொழித்திணிப்பையும் ஏற்காது!

## ஒன்றிய அமைச்சர் தர்மேந்திரபிரதானுக்கு – முதல்வர் மு.க.ஸ்டாலின் காட்டமான பதில்!

**சென்னை, ஏப். 6 –**

**“சி.பி.எஸ்.இ. பாடத்திட்டத்தில் இந்தித் திணிப்பு இல்லை என்று கூறுவது அப்பட்டமான பொய்” என்றும் “தமிழ்நாடு எந்தவொரு மொழித் திணிப்பையும் ஏற்காது” என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒன்றிய அமைச்சர் தர்மேந்திரபிரதானுக்கு காட்டமான பதில் அளித்துள்ளார்.**

இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

தங்களின் கருத்துக்கள் மிகவும் பொறுப்பற்றவை மற்றும் அலட்சியமானவை என்பதோடு இந்தியாவின் பன்முகத்தன்மை, கூட்டாட்சி விழுமியங்கள் மற்றும் மாநிலங்களுக்கான மரியாதை ஆகியவற்றின் மீது கொண்டுள்ள ஆழ்ந்த அலட்சியத்தையே இவை பிரதிபலிக்கின்றன. தமிழ்நாடு #மும்மொழிக்கொள்கையை (Three Language Policy) உறுதியாக நிராகரிக்கிறது. இது ஏதோ ஒரு மொழிக்கு எதிரானது அல்ல; மாறாக மொழித் திணிப்பை எதிர்ப்பதும், அரசியல் சாசன உரிமைகளைப் பாதுகாப்பதுமாகும். முன்னதாக நாடாளுமன்றத்தில் தமிழர்களைப் பற்றி நீங்கள் பேசிய அவதூறு கருத்துகளும், அதனைத் தொடர்ந்து நீங்கள் கோரிய காலதாமதமான மன்னிப்பும், உங்களின் ஏற்றுக்கொள்ள முடியாத நடத்தை முறையையே உறுதிப்படுத்துகின்றன.

**தமிழ்நாட்டை தண்டிக்கும் வகையில் நிதி நிறுத்தம்!**

“இந்தித் திணிப்பு இல்லை” என்று நீங்கள் கூறுவது அப்பட்டமான பொய் மற்றும் நேர்மையற்ற செயலாகும். தமிழ்நாடு போன்ற இந்தி பேசாத மாநிலங்களை, மிகக் குறைந்த விருப்பத் தேர்வுகளுடன் மூன்றாவது மொழியை ஏற்றுக்கொள்ளுமாறு ஒரு கொள்கை ரீதியாக நெருக்கடி கொடுக்கும் போதும், கல்விக்கான நிதி விடுவிப்பு அதனுடன் இணைக்கப்படும்போதும், அங்கே ‘சுய விருப்பம்’ என்ற பேச்சுக்கே இடமில்லை.

சமக்ர சிக்ஷா’ (Samagra Shiksha) திட்டத்தின்கீழ் வழங்கப்பட வேண்டிய 2,200 கோடி ரூபாய் நிதியை, இந்தித் திணிப்பை ஏற்க மறுத்ததற்காகத் தமிழ்நாட்டைத் தண்டிக்கும் நோக்கில் சட்டவிரோதமாக நிறுத்தி வைத்திருப்பது உங்களின் அதிகாரத் துஷ்பிரயோகத்தையே காட்டுகிறது.

**ஒன்றிய அரசின் கருணைத் தொகை அல்ல!**

இவை ஒன்றிய அரசு விருப்பப்பட்டு வழங்கும் கருணைத் தொகையல்ல; வரிப்பணம் மூலம் தமிழ்நாட்டு மக்களுக்குச் சேர வேண்டிய உரிமைத்தொகை. இதனை எக்காரணம் கொண்டும் ஒரு மிரட்டல் கருவியாகப் பயன்படுத்த முடியாது.

ஒன்றைத் தெளிவாகத் தெரிவித்துக் கொள்கிறேன். நெகிழ்வுத்தன்மை என்ற போர்வையிலோ, நிதி நெருக்கடியின் மூலமாகவோ அல்லது தேசிய நலன் என்ற பெயரிலோ முன்னெடுக்கப்படும் எந்தவொரு மொழித் திணிப்பையும் தமிழ்நாடு ஒருபோதும் ஏற்காது. இக்கொள்கை மாணவர்கள் மீது தேவையற்ற சுமையை ஏற்றுவதோடு, மாநிலங்களின் உரிமைகளைப் பறித்து, இந்தியாவின் பன்முகத்தன்மையைச் சிதைத்து “ஒரே இந்தியா” எனும் ஒற்றைத்தன்மை கொண்ட கட்டமைப்பிற்குள் கொண்டுவர முயல்கிறது.

உங்களின் வீண் ஆரவாரமான பேச்சுகளுக்கு நடுவே, இந்த அடிப்படைக் கேள்விகளை நீங்கள் தவிர்க்க கூடாது, உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான் மற்றும் குஜராத் ஆகிய மாநிலங்களில் உள்ள பள்ளிகளில் உண்மையில் எந்த ‘மூன்றாவது இந்திய மொழி’ கற்பிக்கப்படுகிறது? வட இந்தியாவில்

உள்ள எத்தனை PM SHRI பள்ளிகளில் தமிழ், கன்னடம், மலையாளம், தெலுங்கு போன்ற



தென்னிந்திய மொழிகளும், பெங்காலி, ஒடியா, மராட்டி போன்ற மொழிகளும் உண்மையாகவே பயிற்றுவிக்கப்படுகின்றன?

**எத்தனை கேந்திரிய பள்ளிகளில் தமிழ் கற்பிக்கப்படுகிறது?**

எத்தனை கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் தமிழ் கற்பிக்கப்படுகிறது? கடந்த 10 ஆண்டுகளில் எத்தனை தமிழ் மற்றும் பிற தென்னிந்திய மொழி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்? சமஸ்கிருத வளர்ச்சிக்காக செலவிடப்படும் நிதியுடன் ஒப்பிடுகையில், தமிழ், கன்னடம், மலையாளம் மற்றும் ஒடியா போன்ற செம்மொழிகளின் வளர்ச்சிக்காக என்.டி.ஏ (NDA) அரசு எவ்வளவு செலவு செய்துள்ளது என்பதைத் தரவுகளுடன் உங்களால் சமர்ப்பிக்க முடியுமா? இதை உங்களுக்குச் சவாலாகவே விடுக்கிறேன்.

தமிழ்நாட்டில் பள்ளி உட்கட்டமைப்பு வசதிகள் இல்லை என்ற உங்களது கருத்து முற்றிலும் ஆதாரமற்றது. பல பத்தாண்டுகளாகத் தொடர்ந்த முதலீட்டின் மூலம் இந்தியாவின் மிகவும் வலுவான பொதுக் கல்வி அமைப்பை உருவாக்கியுள்ளோம். அதிக மாணவர் சேர்க்கை மற்றும் நலத்திட்டங்களே இதற்கு சாட்சி.

இந்தித் திணிப்புக்கு எதிரான எமது எதிர்ப்பு அச்சத்தினால் உருவானதல்ல. எமது தாய்மொழி தமிழ் ஒருபோதும் வலுக்குன்றாது. தமிழும் தமிழர்களும் ஒவ்வொரு வகைத் திணிப்பையும், பண்பாட்டு ஊடுருவலையும் எதிர்கொண்டு, எதிர்த்து நின்று வென்றுள்ளனர். இது எங்களின் கொள்கை, கண்ணியம் மற்றும் இந்தியாவின் உண்மையான பன்முகத்தன்மையைப் பாதுகாப்பது சார்ந்த விஷயமாகும்.

**இருமொழிக் கொள்கையை ஒரு போதும் விட்டுக் கொடுக்க மாட்டோம்!**

பகுத்தறிவு மற்றும் சமூகத்தில் அனைவரின் ஒருமித்த கருத்தின் அடிப்படையில் உருவான, சிறந்த கல்வி முடிவுகளைத் தந்து கொண்டிருக்கும் எங்களது இருமொழிக் கொள்கையை நாங்கள் ஒருபோதும் விட்டுக்கொடுக்க மாட்டோம். தமிழ்நாட்டின் கல்வித் தரம் உலக அளவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அறிவியல், தொழில்நுட்பம், மருத்துவம் மற்றும் விண்வெளி ஆராய்ச்சி ஆகியவற்றில் தமிழர்கள் உலகளவில் முத்திரை பதித்து வருவதே எமது மொழிக் கொள்கையின் வெற்றிக்குச் சான்று. மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியும், அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியும் இதில் ஆழமாக வேரூன்றியுள்ளன.

எங்களது வாதங்களைத் தரவுகள் மூலம் எங்களால் நிரூபிக்க முடியும், ஆனால் உங்களது வாதங்கள் வெறும் வெற்றுப் பேச்சுகளே தவிர, அதில் தரவுகள் ஏதுமில்லை.

**தமிழ்நாடு நவீன கல்வியில் பின்தங்கியுள்ளதா?**

தமிழ்நாட்டின் பள்ளிகள் நவீன கல்வியில் பின்தங்கியுள்ளன என்று கூறுவது அறியாமையாகும். மாணவர் சேர்க்கை மற்றும் கற்றல் தரத்தில் தமிழ்நாடு தொடர்ந்து முன்னிலை வகிக்கிறது. கடந்த ஐந்து ஆண்டு களில், தமிழ்நாடு அரசு உட்கட்டமைப்பில் பெரும் முன்னேற்றத்தை எட்டியுள்ளதுடன், 20 லட்சத்திற்கும் அதிகமான மாணவர்கள் பயன்பெறும் வகையில் ‘முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்’ போன்ற முன்னோடித் திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. திமுக தேர்தல் அறிக்கைப்படி, இத்திட்டம் 8ஆம் வகுப்பு வரை நீட்டிக்கப்பட்டு, கூடுதலாக 15 லட்சம் மாணவர்கள் பயன்பெறுவார்கள். பொதுக் கல்வியை நாங்கள் வெறும் செலவாகப் பார்க்காமல், சமூக முதலீடாகவே கருதுகிறோம்.

“ஒவ்வொரு இந்தியக் குழந்தையும் கட்டாயம் மூன்று மொழிகளைக் கற்க வேண்டும்” என்ற இந்த அறிவிப்பை, தமிழ்நாட்டு மண்ணில் நின்று மக்களிடம் வாக்கு கேட்கும்போது உங்களால் கூற முடியுமா என நான் சவால் விடுகிறேன்.

**பழனிசாமியின் நிலைப்பாடு என்ன?**

அதேபோல், அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி அவர்களும், அவரது என்.டி.ஏ. கூட்டணிக் கட்சிகளும் தங்களது நிலையைத் தெளிவாகத் தெரிவிக்க வேண்டும். பா.ஜ.க. ஆக்ரோஷமாக முன்னெடுக்கும் இந்த மும்மொழிக் கொள்கையை நீங்கள் ஆதரிக்கிறீர்களா?

பழனிசாமி அவர்கள் தமிழ்நாட்டு மக்களுடன் நிற்கிறாரா? அல்லது இந்தியைத் திணிக்கத் துடிக்கும் டெல்லி எஜமானர்களின் பக்கம் நிற்கிறாரா என்பதைத் தெளிவாக விளக்க வேண்டிய நேரம் இது

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

---

## சிஏஏ சட்ட திருத்தத்தில் மோடி அரசுக்கு ஆதரவாக வாக்களித்தவர்!

# சிறுபான்மையினர் நலனுக்கு எதிரானவர் எடப்பாடி!

### வாக்கு சேகரிப்பில் அமைச்சர் எ.வ.வேலு விமர்சனம்!

திருவண்ணாமலை, ஏப். 6-

சிஏஏ சட்ட திருத்தத்தில் சிறுபான்மையினர் நலனுக்கு எதிராக, மோடி அரசுக்கு ஆதரவாக வாக்களித்த எடப்பாடி எந்த முகத்தோடு வாக்குசேகரிக்க வருகிறார் என்று, திருவண்ணாமலையில் வீதி, வீதியாக வாக்குசேகரிப்பின்போது, பொதுப்பணித்துறை அமைச்சரும், கழக வேட்பாளருமான எ.வ.வேலு அவர்கள் உரையாற்றும் போது குறிப்பிட்டார்.

05.04.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 7.00மணிக்கு திருவண்ணாமலை, மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின், திருவண்ணா மலை சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளரும், பொதுப்பணித்துறை அமைச்சருமான எ.வ.வேலு அவர்கள் பொதுமக்களிடம் வாக்குசேகரித்தலை தொடங்கினார்.

தண்டராம்பட்டு ரோடு, அங்காளம்மன் கோயில், கோரிமேடு 5வது தெரு, பட்டேல் அப்துல் ரசாக் தெரு, தாமரை நகர் வீட்டுவசதி வாரிய குடியிருப்புகள், அண்ணா நகர் 3, 5, 7வது தெருக்கள், மணலூர்பேட்டை ரோடு ஆகிய பகுதிகளில் வீதி, வீதியாக பொதுமக்கள் மற்றும் வியாபாரிகளிடம் பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு வாக்குசேகரித்தார்.

வாக்குசேகரிப்பின் போது அவர் பேசியதாவது:-

இது ஒரு ஜனநாயகப் போர். தமிழ்நாட்டை, தமிழர்களை வஞ்சிக்கும் டெல்லி ஏகாதிபத்தியமான மோடி அரசை எதிர்த்து, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையில் நடக்கும் ஜனநாயகப் போர். திராவிட மாடல் ஆட்சி நாயகன் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆசியோடு மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் வேட்பாளராக, உங்கள் அன்பு சகோதரன் போட்டியிடுகிறேன்.

கடந்த 5 ஆண்டு காலமாக திராவிட மாடல் நாயகன் மு.க.ஸ்டாலின் அவர்கள் நாட்டிற்கும், வீட்டிற்கும் தேவையான ஆட்சியை நடத்தினார். நாட்டிற்கு என்று எடுத்துக் கொண்டால் இந்தியாவிலேயே வளர்ச்சியடைந்த முதல் மாநிலம் தமிழ்நாடு, கல்வியில், தொழில் வளர்ச்சியில், அன்னிய முதலீட்டை ஈர்ப்பத்தில், தனிமனித பொருளாதாரத்தில் என அனைத்து தரப்பிலும் முதலிடத்தில் உள்ளது. இதை நாங்கள் சொல்லவில்லை, ஒன்றிய அரசின் புள்ளிவிவரம் சொல்லுகிறது.

வீட்டிற்கு என்று எடுத்துக்கொண்டால், மகளிருக்கு கலைஞர் உரிமைத்



தொகை ரூபாய் ஆயிரம், கல்லூரி பயில புதுமைப் பெண் திட்டத்தில் ரூபாய் ஆயிரம், தமிழ்ப்புதல்வன் திட்டத்தில் ரூபாய் ஆயிரம். மகளிருக்கு விடியல் பயணம், வடஇந்தியர்களே அதிகமாக ஐஏஎஸ் அதிகாரிகளாக அதிகம்பேர் இருந்தனர். அந்த நிலையை மாற்ற நான் முதல்வன் திட்டம் கொண்டுவந்து தமிழர்கள் ஏன், கூலி வேலை செய்பவர்கள் மகள்கூட இன்று ஐ.ஏ.எஸ். அதிகாரியாக மாறும் நிலை உருவாகியுள்ளது.

சிறுபான்மையினருக்கு எதிரான, குடியுரிமை திட்ட சட்டத்தில் (சிஏஏ) மோடி அரசுக்கு ஆதரவாக நாடாளுமன்றத்தில் வாக்களித்த எடப்பாடி எந்த முகத்தை வைத்துக்கொண்டு மக்களிடம் வாக்கு கேட்கிறார் என்று தெரியவில்லை.

நமது முதல்வர் அண்ணன் ஸ்டாலின் இல்லதரசி திட்டத்தில் ரூ.8ஆயிரம் கூப்பன் கொடுக்கப்படும். உங்களுக்கு தேவையான குளிர்சாதனப் பெட்டியோ, சலவை இயந்திரமோ உங்களுக்கு தேவையானதை வாங்கிக் கொள்ளலாம் என்று அறிவித்திருக்கிறார். மேலும், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை ரூபாய் ஆயிரத்திலிருந்து ரூபாய் இரண்டாயிரமாக உயர்த்தப்படும் என வாக்களித்துள்ளார்.

தமிழர்களை தொடர்ந்து வஞ்சிக்கும் டெல்லி ஏகாதிபத்தியத்தை வீழ்த்துவோம், தமிழ்நாடு வெல்லட்டும்.

இவ்வாறு அவர் உரையாற்றினார்.

வாக்குசேகரிப்பு நிகழ்ச்சியில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாவட்டப் பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாநகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன், மாவட்ட துணை செயலாளர் பிரியா விஜயரங்கன், விஜயலட்சுமிரமேஷ், காங்கிரஸ் மாவட்ட தலைவர் கே.குணசேகரன், ம.தி.மு.க. மாவட்ட செயலாளர் சீனி. கார்த்திகேயன், தே.மு.தி.க. மாவட்ட செயலாளர் வி.எம்.நேரு, சி.பி.எம். எம். சிவக்குமார், சி.பி.ஐ., மாவட்டச் செயலாளர் இரா.திருமலை, முஸ்லீம் லீக் மாவட்டத் தலைவர் ஐ.எம்.சுலைமான்கான், விடுதலை சிறுத்தைகள் மாவட்டச் செயலாளர் ச. நியூட்டன், மனிதநேய மக்கள் கட்சி மாவட்டத் தலைவர் நாசர் உசேன், மக்கள் நீதி மையம் மண்டல பொறுப்பாளர் இரா. அருள், மனிதநேய ஜனநாயக கட்சி ஜி.கேட் குமார், எஸ்.டி.பி.ஐ. மாவட்ட தலைவர் முஸ்தாக் பாஷா, தமிழக முன்னேற்றக் கழக நிறுவனத் தலைவர் கு. ராஜாராம், தமிழக விவசாய தொழிலாளர் பி.வாசு, ஆதித் தமிழர் பேரவை எஸ். கந்தன், தலித் விடுதலை இயக்கம் என்.ஏ.கிச்சா மற்றும் துணை மேயர் சு. ராஜாங்கம், பகுதி பொறுப்பாளர்கள் சு.விஜி (எ) விஜயராஜ், அ.கோவிந்தன், ந.சீனுவாசன், குட்டி க.புகழேந்தி, சி.சண்முகம், பா. ஷெரீப் மற்றும் கூட்டணி இயக்கத்தினர், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

---

## ரிஷிவந்தியம் தொகுதியில் வசந்தம் க.கார்த்திகேயன் வாக்குச் சேகரிப்பு!

ரிஷிவந்தியம், ஏப்.6–

கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மணலூர்பேட்டை ஆஞ்சநேயர் கோவில், சித்தப்பட்டினம், முருக்கம்பாடி, அத்தியந்தல், தேவரடியார்குப்பம் ஆகிய ஊராட்சிகளில் திராவிட மாடல் நல்லாட்சியில் ஐந்து ஆண்டுகளில் நடைபெற்ற வளர்ச்சி பணிகள் எடுத்துக் கூறி கழக வேட்பாளர் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ தீவிரமாக வாக்குச் சேகரித்தார்.

மணலூர்பேட்டை ஆஞ்சநேயர் கோவிலில் 500க்கும் மேற்பட்ட பெண்கள் ஆரத்தி எடுத்து மலர் தூவி, மாலை அணிவித்து சிறப்பான வரவேற்பு அளித்தனர், அதனை தொடர்ந்து பேசிய வசந்தம் கா.கார்த்திகேயன் எம்.எல்.ஏ.,

மணலூர் பேட்டை பேரூராட்சி கழக அரசு பொறுப்பு ஏற்ற உடன் தேர்வு நிலை பேரூராட்சியாக தரம் உயர்த்தப்படும் என்று வாக்குறுதி அளித்தார்.

பிரச்சாரம் மேற்கொண்டு இருந்த போது அருகில் இருந்த தேனீர் கடையில் பொதுமக்களுடன் சேர்ந்து தேநீர் அருந்தினார், அதனைத் தொடர்ந்து உற்சாகமாக மேளம் அடித்து உதயசூரியன் சின்னத்திற்கு தீவிரமாக வாக்குச் சேகரித்தார்.

இந்த பிரச்சாரக் கூட்டத்தில் கழக நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சிகளை சேர்ந்த நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

---

### கழகத் துணைப் பொதுச் செயலாளர்

## கனிமொழி கருணாநிதி எம்.பி.



### தேர்தல் பிரச்சார விபரங்கள்

### சென்னை (06.04.2026 – திங்கட்கிழமை)

| நேரம் | இடம் |
|---|---|
| 4.00 மாலை | **மதுரவாயல் தொகுதி -** முகப்பேர் மேற்கு மசூதி |
| 5.00 மாலை | **அம்பத்தூர் தொகுதி -** அம்பத்தூர் எஸ்டேட் பஸ் நிலையம் அருகில் |
| 6.00 மாலை | **மாதவரம் தொகுதி -** செங்குன்றம் பஜார் பஸ் நிலையம் அருகில் |
| 7.00 மாலை | **திருவொற்றியூர் தொகுதி -** தேரடி |
| 8.00 மாலை | **திரு.வி.க. நகர் தொகுதி -** சந்திரயோகி சமாதி சாலை, பெரம்பூர் பாலம் அருகில் |



திருவண்ணாமலையில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் கழக வேட்பாளரும், பொதுப்பணித்துறை அமைச்சருமான எ.வ.வேலு அவர்கள், பொதுமக்களிடையே வாக்கு சேகரித்தார். உடன் இரா.ஸ்ரீதரன், எஸ்.பன்னீர்செல்வம், ப.கார்த்திவேல்மாறன், பிரியா விஜயரங்கன், மேயர் நிர்மலாவேல்மாறன், டாக்டர் வெற்றிச்செல்வன், சீனி.கார்த்திகேயன், வி.எம்.நேரு, இரா.திருமலை, நாசர் உட்பட பலர் உள்ளனர்.